4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்குத் தலைவரை நியமித்தது குறித்து வணிக வரிகள் (E2) *துறையின் 9–8–2005 ஆம் நாளிட்ட* 28 (3D) *ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

2. 1989 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள் (போக்குவரத்து–III) துறையின் 13–2–2004 ஆம் நாளிட்ட 182 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 59/1988) 212 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

3. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜெ1) துறையின் 14–7–2005 ஆம் நாளிட்ட 133 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

4. தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் உறுப்பினர்–செயலாளருக்குச் சொந்தமான MA KGD 851 G 5N 221985 *ஆம் எண் அடிச்சட்டம் மற்றும்* L15A 30055698 *ஆம் எண் என்ஜின் கொண்ட சீர்வளி வசதி செய்யப்பட்ட ஹோண்டா சிட்டி காருக்கு ஆயுட்கால வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்து உள் (போக்குவரத்து–I) துறையின் 21–9–2005 ஆம் நாளிட்ட 836 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

[2006 ஜனவரி 17

5. "புளூ கிராஸ்" இந்தியா நிறுவனத்துக்குச் சொந்தமான (1) ட்டிஎன்.07 ஜே 8196, (2) ட்டிஎன்.07 எம். 8184, (3) ட்டிஎன்.07 ப்பி 8854 மற்றும் (4) ட்டிஎன்.07 ஏபி 3902 ஆகிய பதிவெண்களைக் கொண்ட கால்நடைகளுக்கான அவசர சிகிச்சை வண்டிகள் நான்கிற்கும் அவை வாடகைக்கு அல்லது விருப்பூதியத்திற்குப் பயன்படுத்தாமல் விலங்குகளின் நலன்களுக்காக சேவை நோக்குடன் பயன்படுத்தப்படும் வரையில் 5 ஆண்டு கால அளவுக்கு அவற்றின்மீது செலுத்தத்தக்க வரி வீதத்தை 50 சதவீதமாகக் குறைத்து உள் (போக்குவரத்து–1) துறையின் 22–9–2005 ஆம் நாளிட்ட 841 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

6. அறிவிக்கையின் இணைப்பில் உள்ள அட்டவணையின் இரண்டாவது நெடும் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வழித்தடங்களில் இயக்கப்படும் சென்னைப் பெருநகர போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) பயணிகள் பேருந்துகளைப் பொறுத்தமட்டில், அந்த அட்டவணையின் 8–வது நெடும் பத்தியில் அவற்றிற்கிணையான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும், செலுத்தத்தக்க கட்டணங்களை அறிவிக்கப்பட்ட சென்னை பெருநகர்ப் பகுதிக்கு அப்பால் 10 கிலோ மீட்டர் சுற்றெல்லைகளுக்கு இயக்கப்படுபவை 31–3–2003 வரை ஒரு இருக்கைக்கு ஒரு காலாண்டிற்கு ரூ.275/– என்பதிலிருந்து ரூ.60/– ஆகவும், 1–4–2003 ஆம் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் ஒரு இருக்கைக்கு ஒரு காலாண்டிற்கு ரூ.325/– என்பதிலிருந்து ரூ.80/– ஆகவும் குறைத்து உள் (போக்குவரத்து–1) துறையின் 22–9–2005 ஆம் நாளிட்ட 843 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

7. சென்னையில் உள்ள ராஜயோகா கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் உபயோகத்தில் உள்ள ட்டி என்.63 0123 ஆம் பதிவு எண் கொண்ட தனியார் சேவை வண்டி வாடகைக்கு அல்லது

2006 ஜனவரி 17]

வெகுமதிக்காக விடப்படாமல் அவ்வண்டிக்கு செலுத்தத்தக்க வரிவீதத்தை ஐந்து ஆண்டு கால அளவிற்கு அல்லது மேற்சொன்ன நிறுவனத்தோடு தொடர்புடைய தொண்டுப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிற வரையில் இவற்றில் எது முந்தையதோ அக்கால அளவிற்கு இயல்பான வரி வீதத்தில் 50 சதவீதமாகக் குறைத்து உள் (போக்குவரத்து–I) துறையின் 29–9–2005 ஆம் நாளிட்ட 923 (1D) ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

8. சென்னை, எண்ணூரில் உள்ள மிஷினரி ஆஃப் சாரிட்டி நிறுவனத்துக்குச் சொந்தமான ட்டிஎன். 20/ எஇசட் 2540 என்கிற பதிவெண்ணைக் கொண்ட அவசர சிகிச்சை வண்டியினைப் பொறுத்தமட்டில் அது வாடகைக்காக அல்லது ஊதியத்திற்காகப் பயன்படுத்தாத நிலையில் அந்நிறுவனத்தின் சேவை பணி நோக்கத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படும் வரையில் அல்லது ஐந்தாண்டு கால அளவிற்கு இவற்றில் எது முந்தையதோ அதுவரையில் அந்த வண்டியின் மீது செலுத்தத்தக்க இயல்பான வரியினை 50% குறைத்தும், 16–3–1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் எண்.10–ல் பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட 16–3–1994 ஆம் நாளிட்ட II (2)/ உள் துறை/942/92 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையினை ரத்து செய்தும் உள் (போக்குவரத்து–I) துறையின் 7–10–2005 ஆம் நாளிட்ட 964 (1டி) ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

9. 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சி மன்றங்கள் மற்றும் மாநகராட்சி மன்றங்கள் (தேர்தல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 8–7–2005 ஆம் நாளிட்ட 103 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவு, 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச்

[2006 ஜனவரி 17

சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (டி) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11 (3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11 (3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) பிரிவு 11 (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

10. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜெ1) துறையின் 11–7–2005 ஆம் நாளிட்ட 128 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

11. 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சி மன்றங்கள் மற்றும் மாநகராட்சி மன்றங்கள் (தேர்தல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 20–10–2005 ஆம் நாளிட்ட 144 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவு, 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (டி) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11 (3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11 (3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) பிரிவு 11 (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2006 ஜனவரி 17]

12. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

13. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

14. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

15. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

2. 2006 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 13 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

3. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

4. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)